பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07 06 2025 **SATURDAY** 7 15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. கனடாவில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஜி.7 நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

2. தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு பிரிக்ஸ் நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

3. மஹாராஷ்ட்ர மாநிலத்தில் கடந்த பல ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த 12 நக்ஸல் தீவிரவாதிகள் அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் முன்னிலையில் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

4. பக்ரீத் பண்டிகையை ஒட்டி, குடியரசுத்தலைவர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

5. இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று, இந்தியா-ஏ அணி, ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 319 ரன் எடுத்துள்ளது.

<>>>>>>>><<<<<<<>

கனடாவில் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள ஜி.7 நாடுகளின் உச்சி மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

மாநாட்டில் பங்கேற்குமாறு கனடா பிரதமர் திரு. **Mark Carney**-யிடமிருந்து பிரதமருக்கு நேற்று அழைப்பு வந்தது.

இதனை சமூகவலைதளத்தில் குறிப்பிட்டுள்ள திரு. நரேந்திர மோடி, சமீபத்தில் நடைபெற்ற கனடா பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற திரு. **Carney**- க்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டார்.

ஜி.7 நாடுகளின் உச்சிமாநாட்டிற்கு அழைத்ததற்காக, கனடா பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொண்ட பிரதமர், இந்தியாவும் கனடாவும் புதுப்பிக்கப்பட்ட உறவுகளுடன் மேலும் வேகமாகவும், பரஸ்பர மரியாதை

மற்றும் பகிர்ந்து கொள்ளப்பட்ட நலன்களால் வழிநடத்தப்பட்டு, துடிப்பான ஜனநாயக நாடுகளாக செயல்படும் என்று கூறினார்.

உச்சிமாநாட்டின் போது, கனடாவின் புதிய பிரதமரை தாம் சந்திக்க மிகுந்த ஆவலுடன் இருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி அதில் தெரிவித்துள்ளார்.

<>>>>>>><<<<<<<>

தீவிரவாத்திற்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு பிரிக்ஸ் நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

பிரேஸிலில் நடைபெற்ற 11வது பிரிக்ஸ் நாடாளுமன்ற அமைப்பின் கூட்டத்தின் போது, மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையிலான இந்திய பிரதிநிதிகளிடம் கலந்துரையாடிய போது பிரிக்ஸ் நாடுகளின் பிரதிநிதிகள் இதனை தெரிவித்தனர்.

தீவிரவாதத்திற்கு எதிரான முழுமையான சகிப்புத்தன்மை என்ற இந்தியாவின் கொள்கைக்கு ஒத்துழைப்பு அளிப்பதாகவும் அந்நாடுகள் உறுதி அளித்துள்ளன.

செயற்கை நுண்ணறிவு, உலக வர்த்தகம் பொருளாதாரம், நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு, உலக அமைதி, பாதுகாப்பு ஆகியவற்றில் பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையே விரிவான கருத்தொற்றுமை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச பிரச்சினைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு இந்தக் கூட்டத்தில் பிரிக்ஸ் நாடுகள் பாராட்டு தெரிவித்ததாக மக்களவை செயலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<>>>>>>><<<<<<<>

மஹாராஷ்ட்ர மாநிலத்தில் கடந்த பல ஆண்டுகளாக தேடப்பட்டு வந்த 12 நக்ஸல் தீவிரவாதிகள் அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் முன்னிலையில் காவல்துறையினரிடம் சரணடைந்தனர்.

மஹாராஷ்ட்ரா – சத்திஷ்கர் எல்லையில் அமைந்துள்ள மாவட்டத்தில் கவாண்டோ கிராமத்திற்கு திரு. ஃபட்னவிஸ் நேற்று சென்றபோது, 12 நக்ஸலைட்டுகள் ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்தனர்.

கச்சரோலி மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உயரதிகாரிகள் அப்போது உடனிருந்தனர்.

சரணடைந்த நக்ஸல் தீவிரவாதிகளுக்கு முதலமைச்சர், இந்திய அரசியலமைப்பின் நகலை வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. தேவேந்திர ஃபட்னவிஸ், ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, சரணடைந்துள்ள நக்ஸலைட்டுகளின் மறுவாழ்விற்கு மாநில அரசின் சார்பில் உதவிகள் செய்துதரப்படும் என்று கூறினார்.

கடந்த 18 மாதங்களில் மாநிலத்தில் 28 மாவோயிஸ்ட்டுகள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 44 பேர் சரணடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

<>>>>>>><<<<<<<>

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, மசூதிகளில் சிறப்பு தொழுகைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்நாளையொட்டி, இஸ்லாமிய மக்களுக்கு தலைவர்கள் பலரும் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், தியாகம், நம்பிக்கை, மனிதநேயம் ஆகியவற்றின் அடையாளமாக பக்ரீத் பண்டிகை திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

சமூகத்தில், ஒற்றுமை, அன்பு, நல்லிணக்கம் ஆகியவற்றை இந்நாள் பரப்புகிறது என்றும் தன்னலமற்ற கடமை உணர்வுடன் நாட்டு மக்கள் சிறந்த சமுதாயத்தை உருவாக்க பாடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்நிலையில், பக்ரீத் பண்டிகை ஜம்மு காஷ்மீரில் வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இன்று காலை மசூதிகளிலும், ஈத்கா மைதானங்களிலும் நடைபெற்ற சிறப்புத் தொழுகையில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

பக்ரீத் பண்டிகையை ஒட்டி, ஜம்மு காஷ்மீர் மக்களுக்கு துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா உள்ளிட்டோர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

உத்தரபிரதேசம், மேற்குவங்கம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் பக்ரித் பண்டிகையை ஒட்டி நடைபெற்ற சிறப்புத் தொழுகையில் பெருந்திரளான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர்.

<>>>>>>><<<<<<<>

நாடு முழுவதும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் வேளாண் வளர்ச்சி இயக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மத்திய அரசு விவசாயிகளுக்காக செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து இதில் விளக்கம் அளிக்கப்படுகிறது.

இந்த பிரச்சார இயக்கத்தின் ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்டம், திரூர் வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பில் பாப்பரம்பாக்கம், கோவிலம்பூண்டி, பேரம்பாக்கம் ஊராட்சிகளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நவீன வேளாண்மை, தோட்டக்கலை குறித்து விவசாயிகளுக்கு, அதிகாரிகள், நிபுணர்கள் விளக்கினர்.

பல்வேறு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து வேளாண் அறிவியல் நிபுணர்கள் அளித்த விளக்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

***Sound Byte** – விவசாயிகள் – 58 **Sec.)***

<>>>>>>><<<<<<<>

நாட்டில் கோவிட் தொற்று அதிகரித்து வரும் நிலையில், தமிழகத்தில் கர்ப்பிணிப் பெண்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள், இணைநோய் உள்ளவர்கள் முகக்கவசம் அணிந்து கொள்வது அவசியம் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், முன்னெச்சரிக்கை

நடவடிக்கையாக மாநிலத்தில் 94 ஆயிரம் படுக்கைகள், 3 ஆயிரம் மெட்ரிக் டன் ஆக்ஸிஜன் சேமிக்கும் வசதிகள் தயார் நிலையில் உள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் பான்மசாலா, குட்கா போன்றவற்றிற்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், கர்நாடக மாநிலத்தில் தடையில்லாத காரணத்தால், அங்கிருந்து தமிழகத்திற்கு இப்பொருட்கள் கடத்தப்பட்டு வருவதால், அதனை தடுப்பது காவல்துறைக்கு பெரும் சவாலாக உள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<>>>>>>><<<<<<<<>

இந்தியாவில் ரஃபேல் போர் விமானங்களை கூட்டாக தயாரிப்பதற்கான ஒப்பந்தத்தில் பிரான்ஸ் நாட்டின் **Dassualt** நிறுவனத்திற்கும், இந்தியாவின் டாடா நிறுவனத்திற்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

பிரான்ஸ் நாட்டிற்கு வெளியே ரஃபேல் போர் விமானங்கள் தயாரிக்கப்படவுள்ளது இதுவே முதல் முறையாகும்.

ரஃபேர் போர் விமானங்களை தயாரிப்பதற்கான ஆலையை ஹைதராபாதில் நிறுவ, இரண்டு நிறுவனங்களும் முடிவு செய்துள்ளன.

இந்த ஒப்பந்தத்தால், இந்தியாவின் விமான கட்டமைப்புத் துறை மேலும் ஊக்கம் பெறும் என்று இருநிறுவனங்களின் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<>>>>>>><<<<<<<<>

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான நேற்று, இந்தியா-ஏ அணி, ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட் இழப்புக்கு 319 ரன் எடுத்துள்ளது.

**Northampton-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீச தீர்மானித்தது.

இதையடுத்து பேட் செய்த இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரரில் ஒருவரான **Yashasvi Jaiswal** , 17 ரன் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

கே.எல். ராகுல் சற்று நிதானமாக விளையாடி, 116 ரன் குவித்தார்.

தனுஷ் 5 ரன்னுடனும், **Anshul** ஒரு ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

**<>>>>>>><<<<<<<>**

பிரெஞ்ச் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டி இன்று பாரிஸில் நடைபெறவுள்ளது.

இதில், பெலாரஸின் **Sabalenka** உலக தரவரிசைப் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் **Cori Dionne Coco**-வை எதிர்கொள்கிறார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டிக்கு இத்தாலியின் **Jannik Sinner** முன்னேறியுள்ளார். நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் அவர், ஸ்பெயினின் **Carlos Alcaraz-**ஐ எதிர்கொள்கிறார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதியில் **Sinner,** 6-4, 7-5, 7-6 என்ற செட்கணக்கில் செர்பியாவின் **Novak Djokovic-**ஐ வென்றார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியின்போது, இத்தாலியின் **Lorenzo Musetti** காயம் காரணமாக பாதியிலேயே ஆட்டத்திலிருந்து வெளியேறியதால், ஸ்பெயினின் **Carlos Alcaraz** வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

கலப்பு இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இத்தாலியின் **Sara Errani - Andrea** இணை பட்டம் வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்த இணை 6-4, 6-2 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் **Taylor Townsend – Evan King** இணையை வென்றது.

<>>>>>>>END<<<<<<<>